**செய்தி வெளியீடு எண்: 305** **நாள்: 30.04.2020**

**<u>தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு, அரசு அளித்த வட்டி தள்ளுபடி சலுகையினை மேலும் 30.09.2020 வரை காலத்திற்கு நீட்டிக்கப்பட்டது தொடர்பான வரைவு பத்திரிக்கை செய்தி</u>**

வட்டி சுமையின் காரணமாக, விற்பனைப் பத்திரம் பெறாமல் இருந்த, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு, மாதாந்திர தவணை செலுத்தத் தவறியதற்கான அபராத வட்டி மற்றும் முதலாக்கத்தின் மீதான வட்டி ஆகியவற்றினை முழுவதுமாகவும், நிலத்தின் இறுதி விலை வித்தியாசத்தின் மீதான வட்டியினை, வருடத்திற்கு ஐந்து மாதம் மட்டும் கணக்கிட்டு தள்ளுபடி செய்து, அரசு கடந்த 15.06.2017 அன்று ஆணை வழங்கியது. அரசின் இச்சலுகையினை முதற்கட்டமாக, ஒருவருட காலத்திற்கு அதாவது 26.08.2018 வரையிலும், பின்னர், இரு முறை கால நீட்டிப்பு செய்யப்பட்டு, எதிர்வரும் 31.03.2020 அன்றுடன் இச்சலுகை முடிவடைய இருந்தது.

இந்நிலையில், அரசின் இச்சலுகையினை, கால நீட்டிப்பு செய்யுமாறு, தமிழக வீட்டு வசதி வாரிய ஒருங்கிணைந்த ஒதுக்கீட்டாளர்கள் நலச் சங்கம் கோரிக்கை வைத்தனர். 2020 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில், கடந்த 24.03.2020 அன்று நடைபெற்ற வீட்டுவசதி மற்றும் நகர்ப் புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் போது, நடப்பில் உள்ள, வட்டித் தள்ளுபடி திட்டத்தினை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய ஒதுக்கீடுதாரர்கள் பயன்பெறும் வகையில், இச்சலுகையினை எதிர்வரும் 30.09.2020 அன்று வரை கால நீட்டிப்பு செய்ய, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வட்டித் தள்ளுபடி திட்டத்திற்கு தகுதியான ஒதுக்கீடுதாரர்கள், உடனடியாக சம்மந்தப்பட்ட கோட்டம்/பிரிவு அலுவலகங்களை அணுகி, வட்டித் தள்ளுபடி நீங்கலாக, நிலுவைத் தொகையினை, ஒரே தவணையாக, எதிர்வரும் 30.09.2020 ற்குள் செலுத்தி, விற்பனைப் பத்திரம் பெற, இப்பொன்னான வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**